சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

**முன்னிலை : திருமதி.A.பர்சத் பேகம் பிஏ.எம்.எல்.,**

சார்பு நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்

2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 -ம் நாள், திங்கட்கிழமை.

I.A.No.2/2025

in

H.M.O.P.No.33/2024

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, தில்லைகூத்தனார் தெரு, கதவு எண்.1/1B என்ற விலாசத்தினை பூர்வீகமாகக் கொண்டு வேலையின் காரணமாக தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் தாலுகா தாலம்பூ தெரு, 2 வது குறுக்குத் தெரு, என்.ஜி.ஓ காலனி, தரைதளம், கதவு எண்.4/146/1 என்ற முகவரியில் வசிக்கும் ரத்தினவேல் அவர்கள் குமாரர் இந்து வயது உள்ள ஜெயகணேஷ்

.......... மனுதாரர்/மனுதாரர்

/எதிர்/

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தாலுகா, கலியாவூர் காலாங்கரை கிராமம், நடுத்தெரு, கதவு எண்.7/20A ல் வசிக்கும் கண்ணன் அவர்கள் குமாரத்தி இந்து 27 வயதுள்ள கல்யாணி

--- எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்

இம்மனுவானது, மனுதாரரின் மைனர் மகள் வயது 5 உள்ள காவியதர்ஷினி இளவர் நிலையில் இருப்பதால் தகப்பனார் என்ற முறையில் இளவர் காலம் முடிவுறும் வரைக்கும் நேரில் பார்த்திட காலம், தேதி கிழமை குறிப்பிட்டு அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டி பிரிவு 26 இந்து திருமண சட்டப்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள் 12.092025, (சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்)

நீதிமன்ற முத்திரை கட்டணம் - ரூ.20/-

இந்த மனு இந்நீதிமன்றம் முன்பாக 06.10.2025 தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.அனந்தசுப்பிரமணியன் அவர்களும், எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த

வழக்கறிஞர் திரு.S.அங்கப்பன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

1 முடிவில் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2 மனுதாரரரும் அவருடைய பெற்றோர்களும் எதிர்மனுதாரர் முன்னிலையில் தேவைப்பட்டால் பொதுநபர் முன்னிலையிலும் பொது இடத்தில் வைத்து ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை குழந்தையை பார்க்க அனுமதித்து குழந்தையின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து அன்புடன் அணுகி பார்த்து மகிழ அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

3 செலவுத்தொகைக்கு உத்தரவு இல்லை.

2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 -ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்
I.A.No.1/2025
இன்
H.M.O.P.No.33/2024

உத்தரவாணை

நாள் **13.10.2025**